ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி ஹூ சித்திரைமீ பகுதி ச.
Vol 8. April & May 1931. No. 4.

## நம்பிள்ளை வைபவம்.

——:O:——

(34-ம் பக்கத்தொடர்ச்சி.)

### பிள்ளை தமது குழாங்கட்கு அருளிச்செய்தவை.

ஒரு சமயத்தில் மஹாபாஷ்யபட்டர் என்னும் பெரியார் நம்பிள்ளையைநோக்கி (1) சைதன்யவஸ்துவாயிருக்கிறஆத்மாவுக்கு சரீரம் கழுவினால் பரமபதம் கையது (சித்தம்) என்று அறுதியிட்டிருப்பது எவ்வர்த்தத்தாலென்று வினவினர். அதற்கு நம்பிள்ளை அருளிச்செய்வார்:— ஸ்ரீய:பதியான திருமாலே (2) உபாயோபேயமென்று அறுதியிட்டிருப்பது. நெடுங்காலம் (3) இழந்துகிடந்த வஸ்துவைக் காட்டித்தந்த ஆசார்யன் பக்கலிலே மிகவும் விசுவாசமுண்டாயிருத்தல். அருளிச்செய்த (4) ஸ்ரீபாஷ்யத்தின்படியே

(1) சைதன்யவஸ்து—அறிவுடைப் பொருள். (சைதன்யம்-அறிவு).

(2) உபாயம்—விரும்பிய பயனை யடைதற்குச் சாதனமாயிருப்பது. உபேயம்—விரும்பியடையும் பயன்.

(3) இழந்துகிடந்த வஸ்து—இழக்கப்பட்டுக் கிடந்த ஈச்வர வஸ்து. எம்பெருமானை அறிந்து அனுபவித்தற்குரிய ஆத்மவஸ்து அஞ்ஞானத்தால் நெடுங்காலமாய் அவனை யறியப்பெறாது மழுங்கிக் கிடத்தலால் இவ்வாறு கூறினர்.

(4) ஸ்ரீபாஷ்யத்தின்படி—ஸ்ரீபாஷ்யத்தில் பிறர்மதங்களைந்து தம் மதம் நாட்டிய முறைப்படியே.

(5) எம்பெருமானர் தரிசனமே (6) சித்தாந்தமென்றிருத்தல் (7) ஸ்ரீராமாயணத்தாலே பகவத்குணனுசந்தானம் பண்ணுதல் (8) ஆழ்வாரருளிச்செயல்களாலே பொழுது போக்குதல் என்னும் இவற்றையே இயல்பாகவுடையார்க்குச் சரீரம் பிரிந்தால் அப் பேற்றிற் சந்தேகமில்லை. (9) "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" என்றவாறு பரமபதப் பேறு கையகத்ததாம் என்றருளினர்.

இதனல், உபாயோபேய நிர்ணயமும், ஆசார்ய விசுவாசமும், தர்சனவிசுவாசமும், பகவத்கல்யாணகுணனுபவ (10)பாரவச்யமும்

---

(5) எம்பெருமானர் தரிசனம்—ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதம். உடையவர் இதனை வளப்படுத்தி வளர்த்தமைபற்றி நம்பெருமாளால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டதென்பர்.

"எம்பெருமானர்தரிசனமென்றேஇதற்கு
நம்பெருமாள்பேரிட்டுநாட்டிவைத்தார்—அம்புவியோர்
இந்தத்தரிசனத்தைஎம்பெருமானர்வளர்தத
அந்தசெயலறிகைக்கா. (உபதேசரத்னமாலை.)

"ஆன்றதமிழ் மறைகளாயிரமும், ஈன்ற-முதத்தாய் சடகோபன்மொய்ம் பால்வளர்த்த, இதத்தாய் இராமாநுஜன்" என்பதுங் காண்க.

(6) சித்தாந்தம்—மேல் மறுத்துரைக்க இடமின்றித்துணிந்த பொருள்.

(7) ஸ்ரீராமாயணத்தில் புருஷகாரத்திற்குரியளான பிராட்டியின் வைபவம் சொல்லப்படுதலால் இவ்வாறு கூறினர். "ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ் சொல்லுகிறது" என்று ஸ்ரீலோக தேசிகன் அருளிச் செய்ததும் அதற்கு பெரிய ஜீயர் அருளிய வியாக்யானமும் இங்கு நோக்கத்தக்கன.

(8) அருளிச்செயல் முழுமையும், பகவத் விஷயமே உரைக்கப்படுத லால் அவற்றுற் பொழுது போக்குதல் ஈசுவர விஷயத்திற் பொழுது போக்குதலேயாம்.

(9) இவ்வியல்புகளுடையார் ப்ரபன்னர்கள் ஆதலாலும், அவர்கட்குச் சரீரம் கழிந்த கணமே, வீடுபேறு சித்தமென்பது நமது சித்தாந்தத்தின் துணிபாதலாலும் இவ்வாறு கூறியருளினர். உபாஸகர்களைப் போன்று கர்ம சாசத்தனவும் எதிர்பார்த்திருக்கை இவர்கட்கில்லை யென்பதாயிற்று.

(10) பாரவச்யம்—பரவசப்படுதல், ஈடுபாடு.

உண்டாகவே (11) பிராப்யசித்தி உண்டாமென்று உத்தரமருளிச் செய்தாராயிற்று.

பின்பு பாண்டியநாட்டினின்றும் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து நம்பிள்ளை ஸ்ரீபாதத்தில் தெண்டனிட்டு எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்ட பிள்ளையும் அவர்களைநோக்கி (12) கடற்கரை வெளியை நினைத்திருங்களென்று அருளிச்செய்தார்.

அவர்களும் அதுகேட்டு மணல் மேடுகளையும், காவற்காடுகளையுமோ அடியோங்கள் நினைத்திருப்பதென்று பணிவுடன் பகர்ந்தனர். பிள்ளை அதனைக்கேட்டு, புன்முறுவல்பூத்த திருமுகமண்டலத்துடன் அருளிச்செய்கிறார். சக்கரவர்த்தித் திருமகன் கடற்கரையிலே வானர சேனைகளுடன் தங்கியிருந்தபொழுது வானர வீரர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதைப் பொருட்படுத்தாது பெருமானையே நோக்கிக்கொண்டு கிடந்தனர். ஆனால், பெருமானோ அவர்கள் கண்ணுறங்குமளவும் தான் உறங்குவான்போல் யோகுசெய்து கிடந்தனன். பிறகு அவர்கள் கண்ணுறங்கினவுடன் அம்பறுத் தூணியை முதுகிலே கட்டிக்கொண்டு கையிற்பற்றிய சார்ங்கத்துடனும், பிடித்த சரத்துடனும் இரவு முழுதும் கண்களை இமைகாப்பதுபோல் அவர்களைப் பாதுகாவல் புரிந்தருளினன். இவ்வாறு தன்னை அடைந்தவர்களுக்கு மிகவும் எளியனான சக்கரவர்த்தித் திருமகனுடைய திருவடிகளே தஞ்சமென்று கருதியிருங்கள் என்றருளிச்செய்தனர்.

---

(11) பிராப்யஸித்தி—பலப்பேறு, வீடு பேற்றையடைந்து கைங்கர்யத்தைப் பெறுதல்.

(12) இவ்வழகிய வாக்கியம், முன்பொருகால் கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டராலும், அருளிசசெய்யப்பட்டுளது. அது வருமாறு:—

ஒருநாள் வீரசிகாமணிப் பல்லவராயன் என்னும் அரசன், பட்டரைத் தெண்டனிட்டு, 'ஸ்வாமீ! அடியேனுக்கு ராஜ்யகாரியங்கள் மிகவும் இருத்தலால் பகவத் விஷயம் கேட்பதற்குச் சிறிதும் அவகாசமில்லை. ஆதலால் அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தத்தை அருளிச் செய்யவேணு'மென்று வேண்டிக்கொண்டான். அப்பொழுது பட்டர் அவனை நோக்கிக் "கடற்கரை வெளியை நினைத்திரும்" என்று அருளிச்செய்தார். அது

இதனால் ஒருவன் தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ளுங் கருத்தின்றிக் கவலையொழிந்திருக்கும் நிலைகை கூடவே ஸர்வரக்ஷகனை எம்பெருமான் அவனைக் கைக்கொண்டு ரக்ஷிப்பன் என்பது பெறப்படும்.

பின் ஒருகால் நம்பிள்ளையிடத்தில் எம்பெருமானையொழிந்த மற்றைத் தெய்வங்களை வழிபாடு புரியலாகாதென்கிற நீங்கள் நித்திய நைமித்தியாதிகளில் அக்கினி, இந்திரன் முதலிய இதர தெய்வங்களை வழிபடுவதும், ஆல்யங்களை வழிபடாதொழிவதும் ஏனோவென்று வினவினர்.

அதற்குப் பிள்ளையும், வாரீர்! உலகத்தார் ஓமத்தீயை வழிபடுகின்றனர் (13) ஈமத்தீயைக் கண்டால் அருவருப்புடன் அகல விலகிச் செல்கின்றனர். அவ்வாறே இங்கும் நித்ய கர்மங்களில் (14) பகவத்ப்ரகார புத்தியால் பண்ணுகிற வழிபாடு அப்பகவானது

---

கேட்ட அரசன் அதன் கருத்தை அறியாது திகைத்து நின்றான், அது கண்ட பட்டர் அவனை நோக்கி, கேளீர்! உவர்க்கடலின் கரையில் ஓரமிர்தக் கடல் போலச் சக்கரவர்த்தித் திருமகன் வானர சேனைகளுடன் எழுந்தருளியிருந்தபொழுது. வானரர்கள் இராவணனது சேனாபலத்தால் ஸ்ரீராமபிரானுக்கு என்ன தீங்கு நேரிடுமோவென்று மிகவும் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர். பின் நள்ளிரவில் அயர்ச்சியால் அவர்கள் செயலற்றுறங்கினர். அதுகண்ட பெருமான் இளையபெருமாளுடன் கையிற் கோதண்டத்தை ஏந்திப் பறவைகள் தம் குஞ்சுகளைத் தங்கள் சிறகுகளாற் பொதிந்து பாதுகாப்பதுபோல வானர சேனைகட்குத் தீங்கு சிறிதும் நேராமல் நடையாடுகின்ற மதில்போல் நாற்றிசையும் சுற்றிவந்து அவர்களைப் பாதுகாத்தருளினர். இவ்வாறு ரக்ஷித்தருளிய ஸ்ரீராமபிரானுடைய கையும் வில்லுமே தஞ்சமென்றிருக்கக் கடவீர் என்று கூறியருளினர். துயிலும்பொழுது ரக்ஷிப்பவன் துயிலுணர்ந்தபொழுதும் ரக்ஷிப்பானென்பது கருத்தாயிற்று. இதற்கு நம்பிள்ளை திருவுள்ளம் மேலே விளக்கப்பட்டது. ஒத்த கருத்தினரான இவர் இருவர்க்கும் இவ்வாறு இதிற்கருத்து வேறுபட்டது அதிகாரானுகுணம்பற்றிப் போலும்.

(13) ஈமம்—மயானம்.

(14) பகவத்ப்ரகார புத்தியால் வழிபடுகையாவது—அனைத்தையும், தனது திருமேனியாகக்கொண்ட எம்பெருமானுக்கு அக்கினி, இந்திரன் முதலிய தேவர்களும் சரீரமாவர் என்னுங் கருத்தினால் அவர்களை வழிபடுகை.

வழிபாடே யாம் என்று (15) விசேஷ சாஸ்திரம் விதிக்கின்றது. ஆனால் ஆலயப் பிரதிஷ்டைகளில், பரத்வ விஷயத்தில் உண்மைக்கு மாறுபாடாகக் கருதியிருக்கும் சில தாமத புருஷர்களாலே வேத விரோதமான ஆகமங்களாலும், மந்திர தந்திர முறைகளாலும், ஸ்வதந்திர புத்தியுடன் மற்றைத் தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இங்கு இவற்றை எம்பெருமானது வடிவமென்று (பகவத் ப்ரகாரபுத்யா) உபாஸனைபுரிய விதியுமில்லை. அன்றியும் மற்றைத் தெய்வக் குழாங்களிலும் வைத்துத் தூரவிட்டு நீங்கவேண்டுந் தன்மை உருத்திரனுக்கு மிகவும் உண்டு. எவ்வாறெனில் சத்வ குணத்திற்கு மிகவும் விரோதியான தமோகுண மிகுதியுமுடையவனாதலால் நித்யகர்மங்கள் முதலியவற்றிற்போல ஆலயங்களிலும் பகவத் ப்ரகார புத்தியினால் வழிபடலாகாது. எனவேவிடத்தக்கவைகளென்று அறியப்பட்டவைகளான பகவத் விஷய விரோதிகள் கைக்கொள்ளத்தக்கவையாகவும், கைக்கொள்ளத்தக்கதென்று அறியப்பட்ட பகவத் விஷயம் கைவிடத்தக்கதாகவும், கொள்ளத்தகுமோ? என்றருளிச்செய்தார்.

அதனால், இதர தேவதைகள் பகவத் பிரகார பூதரென்று (ஸரீரமாந்தன்மையர்) வேதாந்தங்களால் விதிக்கப்பட்டிருப்பினும், அவர்கட்கே பரத்வம் தந்து நாட்டப்பட்டிருக்கும் ஆலயங்களில் அவர்களை வழிபடுதல் தகாதென்றவாறாயிற்று.*

நம்பிள்ளையை, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து தெண்டனிட்டு அவரை நோக்கித் திருமேனி மிகவும் இளைத்திருக்கிறதேயென்று விண்ணப்பஞ் செய்தனர். பிள்ளையும் அதுகேட்டு அவரை நோக்கி "ஒன்று தேய்தல் ஒன்று வளருதலன்றோ" என்றருளிச்செய்தனர்.

இதனால், ஞானபக்தி வைராக்யங்கள் வளர 'நினைந்து நைந்துள்கரைந்துருகி' என்றபடி சரீரம தேயுமென்று அருளிச்செய்தாராயிற்று.

---

(15) விசேஷ சாஸ்திரம்—சிறப்பியல்புகளை விதிக்கும் நூல்.

* "பகவத் சேஷத்வத்திலும் அந்யசேஷத்வம் கழிகையே பிரதானம்; "மறந்தும் புறந்தொழாமாந்தா" (நான்முகன் திருவந்தாதி) என்கையாலே" என்று முமுக்ஷுப்படியில் லோக தேசிகன் அருளிச் செய்வதும், அதற்கு மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வியாக்கியானமும் இங்கு நோக்கத்தக்கன. இதுபற்றியே "வணங்கேன் பிறதெய்வம் மாலடியாரல்லாக், குணங்கேடர் தங்களுடன் கூடேன்" என்பர் திவ்யகவியும்.

பின்பு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து பிள்ளையைப் பணிந்து திருமேனி இளைத்திருந்தபடியைக்கண்டு ஆரோக்யஞ் சிறிதுமில்லையோ என்று கேட்டனர். அதற்குப் பிள்ளையும் நாமென்ன யுத்தஞ் செய்யப்போகிறோமோ? பெருமாளைச் சேவித்துக்கொண்டிருப்பதற்கு வேண்டிய ஆரோக்யமுளது. குறையொன்றுமில்லை என்று கூறியருளினார். ஆகையாலே ஸ்ரீவைஷ்ணவனுக்குச் சரீர ஆரோக்யத்தில் விருப்பம் கூடாதென்பதாயிற்று.*

பின்பு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பிள்ளை திருமேனி நோவுசாத்தியிருந்தமை கேட்டு வந்து பிள்ளையைத் தெண்டனிட்டு நோயைக் கண்டு வெறுப்புற்றனர். பிள்ளையும் அதனைக்கண்டு அவரை நோக்கி இவ்வாறு வெறுப்பதேனோ? இச்சரீரத்தில் வந்த நோயை நல்ல விருந்து வந்ததாகவன்றோ யான் நினைத்திருக்கின்றது. என்றருளிச்செய்தனர்.

இதனால் *க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரிய மிவாதிதிம் "வருந்தியுடம்பின் பயன் கொண்டார் கூற்றம் வருங்காற் பரிவதிலர்" என்ற இது திருவுள்ளக்கருதாயிற்று.

(தொடரும்)

---

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.

---

* "தன்னை உள்ளபடி அறியவொட்டாதே விபரீத ஞானத்தை ஜனிப்பித்து இருபத்துநாலு தத்வங்களினுடைய திரளாய், அசித்யமாய் எப்போதும் ஒக்கப் பரிணமிக்கக்கடவதாய், ஒருநாளும் ஞானத்துக்கு இருப்பிடமின்றிக்கே அனந்த துக்கங்களை விளைப்பிக்கக்கடவதாய், சப்தாதி விஷயங்களிலே மூட்டி நசிப்பிக்குமென்று (சரணாகதன்) தன் தேகத்தை நினைப்பான்" என்று லோகதேசிகன் நவரத்னமாலையில் அருளிசசெய்தவாலும் ப்ரபன்னர்களுக்கு தேகத்திலும் அதன் ஆரோக்யத்திலும் உபேக்ஷை பிறத்தல் இன்றியமையாதது ஆதலால் பிள்ளை இங்ஙனம் அருளிச்செய்தனர்.

* இதிகாச சமுச்சயம். க்ருதக்ருத்யா.—செய்யப்பட்ட ப்ரபத்தி ரூபமான வியாபாரமுடையார், ம்ருத்யும் - யமனை. பிரியம அதிதிம் இவ-அன்புக்குரிய விருந்தினனைப் போன்று. ப்ரதீக்ஷந்தே-எதிர்பார்த்திருப்பர்.

ஸ்ரீ:

# நன்கொடை.

நம்பூர்வாசார்யர்கள் பொன்னேபோற் போற்றிவந்த ஸம்ப்ரதாயத்தைப் பெரியாரது உரையாகிய கிரணங்களைக்கொண்டு பிரகாசிப்பிக்கின்ற நம் திவாகரம், நிலவுலகில் என்றும் பொலிவுற்றிலங்குமாறு பல தார்மிகர்கள் பொருளுதவி புரிந்திருக்கின்றார்கள். அதுபோல இப்பொழுது தச்சநல்லூர் பாத்திர வியாபாரம் ஸ்ரீமாந், க. முத்துரங்கசாமி நாயுடவர்களும், பெங்களூர் ஸ்ரீமாந், S. P. R. நாயுடவர்களும் (Military Text audit accountant) ஜீவித சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஒவ்வொருவரும் இருபத்தைந்து ரூபா நன்கொடை செய்திருக்கின்றனர். நமது திவாகரம் பிறிதோர் பயனைக் கருதாது பொதுநலனிலே குறிப்புடையதாய் உழைத்துவருவதைக் குறிப்பாலறிந்து கொடைபுரிந்த இவர்களது பெருந்தகைமை போற்றத்தக்கதே. இவர்கள் நீண்ட வாழ்நாளைப் பெற்று எல்லா உறுதிப்பொருளுமுடையவராய் இன்புற எல்லாம்வல்ல எம்பெருமான் இன்னருள்புரிவானாக.

ஸர்வேசுவரனுடைய பேரருளை முன்னிட்டும், பெரியாரது துணையை மேற்கொண்டும் இவ்வாண்டில் திவாகரத்தின் பேரால் பிரிண்டிங் & பைண்டிங் ஆபீஸ் பெரிதாகவே தொடங்கப்பட்டுள தென்பதைப் பன்முறை யறிவித்துளோமாதலால் யாவருமறிவர். இந்த ஆபீஸ் விஷயமாகச் சில நண்பர்களிடத்தில் கடனாக வாங்கிய தொகையை விரைவில் செலுத்தவேண்டியதிருப்பதால் எல்லா அபிமானிகளும், தத்தம் இயல்புக்கேற்றவாறு ஸம்ரக்ஷக, போஷக, ஜீவித சந்தாதாரர்களாகச் சேர்ந்து உதவிபுரிய வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

# மதிப்புரை.

—.O:—

தமிழ்ப் பேரகராதி:—சென்னைச் சர்வகலா சங்கத்தார் நீண்ட பல காலமாக அரிய பெரிய அறிஞர்களின் துணைகொண்டு பொருண்மிகச் சிலவிட்டுப் பதிப்பித்துவரும் இவ்வகராதியின் நான்காவது தொகுதியின் மூன்றாவது பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது. இது, பலபாஷா விற்பன்னரால் பரிசீலனை செய்யப்பெற்று வெளிவருகிறது. இஃதின்ன பெற்றியதென்பது இதன் சொற்பொருள் விளக்கத்தாற் போதரும். இதில் 'நியமிதம்' என்னும் சொன்முதல், 'பஞ்சீகரணம்' என்னும் மொழியிறுதியாகப் பலவரிய தமிழ்ச்சொற்கட்குப் பொருளெழுதப்பெற்றுளது. தற்காலம் ஆங்கிலம்வல்ல நாகரிகருக்கிது பெருந்துணையாயிருப்பதோடு, தமிழ் மக்கட்கும் உபயோகமாகவிருக்கும். இது விஷயத்தில் அதிகாரிகள் மேற்கொண்ட நன்முயற்சியும், ஊக்கமும் பெரிதும் பயனளிக்கத்தக்கன.

159 பக்கங்களுள்ள இப்பகுதியின் விலை ரூ 2—0—0

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க.

THE MADRAS LAW JOURNAL OFFICE,
Post Box 604, Mylopore,
MADRAS.

பத்திராதிபர்.